Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசு௵ கார்த்திகை – மார்கழி மீ 1965 நவம்பர்	பகுதி 8

MEMBERS OF THE EDITORIAL BOARD

1. Sri A. K. SITARAMAN, B.A., L.T. (*Editor*)
2. ,, L. MARIAPRAGASAM, B.A., L.T., J.P. (*Publisher*)
3. ,, FRANK DORAISWAMY, M.A., M.Ed. (*Journal Secretary*)
4. ,, V. S. SARAVANAN
5. ,, S. NATARAJAN
6. ,, R. RAJAMANICKAM
7. ,, V. PERUMAL
8. ,, M. S. ARULSWAMY.

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 பை.

பொருளடக்கம்

1.	வானொலிப் பேச்சு	...	141
2.	ஊர்வன (Reptiles)	...	144
3.	பாரத தரிசனம்	...	148
4.	கல்வி எதிரொலி (Education Echo)	...	151

தொடக்கப்பள்ளி நிருவாகிகள் சங்கம், குடந்தை

4–12–65-ல் ஷை சங்கப் பொதுக்குழுக் கூட்டத்தில் அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. ஆசிரிய நிருவாகிகள் பில் மாற்றுவதற்குப் பாங்குக்குச் செல்ல சிறு விடுதி எடுத்துத்தான் செல்லவேண்டும் என்பது சிரம சாத்தியமானது. ஆசிரியருக்கு ஆண்டிற்குப் 12 நாட்கள் மட்டுமே C. L. உண்டு. அத்தனையையும் பில் மாற்றுவதற்கே செலவிடப்பட்டால் பின் சொந்த முறையில் தேவைப்படும் போது C. L. க்கு எங்கே போவது? எனவே பில் மாற்றும் நாளை ஊழிய நாளாகவே மதிக்கப்பட வேண்டும்.

2. ஓர் இடத்தில் புதிய பள்ளி துவக்க வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டியது கல்வி இலாகாவினராகவே இருக்கவேண்டும். அப்படியில்லாமல் பஞ்சாயத்து யூனியனிடம் பொறுப்பு விடப்பட்டிருப்பது ரத்து செய்யப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியனிடம் பொறுப்பு விடப்பட்டிருப்பதானது உதவிபெறும் பள்ளிகளை நசுக்குவதற்கே பயன்படுகிறது.

3. பஞ்சாயத்து யூனியன் ஆளுகைப் பிராந்தியத்தில் உள்ள உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளை நடத்துவதில் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்படுவதாக தண்டிக்கப்பட வேண்டும். ஏழைக் குழந்தைகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் புத்தகம், சிலேட்டு, படங்கள் முதலியன யூனியன் பள்ளிகளுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. ஆனால் யூனியன் கொண்டாடும் விழாக்கள், யூனியன் விற்கும் பொருள்களை வாங்குவது, சேகரிக்கும் நிதிக்கு நன்கொடை அளிப்பது போன்றவைகளில் உதவி பெறும் பள்ளிகள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. ஆசிரியர் நியமனத்தில் யூனியன் பள்ளியாக இருந்தால் உடனடியாக நியமிக்கப்படுகிறது. உதவி பெறும் பள்ளியாக இருந்தால் பல மாதங்கள் காலம் தாழ்த்தப்படுகிறது. எனவே கல்வி சம்பந்தமான நிருவாகம் அனைத்தும் பஞ்சாயத்து யூனியனிலிருந்து பிரிக்கப்பட்டு கல்வி இலாகாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

Printed by Rev. Bro. Antony at the St. Louis Institute Press, Adyar, Madras-20 and Published by Sri L. Mariapragasam, B. A., L. T., J. P. for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Editor: Sri A. K. Sitharaman, B. A., L. T.

பாலர் கல்வி

தொகுதி 30 | விசுவாவசு ஹு கார்த்திகை—மார்கழி மீ 1965—நவம்பர் | பகுதி 8

வானொலிப் பேச்சு*

(தென்னிந்திய ஆசிரியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மரியப்பிரகாசம், B.A.,L.T., J.P. அவர்கள் வானொலியில் பேசிய பேச்சைத் தலையங்கமாகத் தந்துள்ளோம்).

1931-ஆம் ஆண்டிலிருந்து கல்வி வாரக் கொண்டாட்டம் ஒவ்வோராண்டும் இம்மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது. இக்கொண்டாட்டத்தைத் தொடங்கி வைத்த பெருமை தென்னிந்திய ஆசிரியச் சங்கத்தைச் சாரும். இவ்வாண்டு அக்டோபர் 27-ஆம் நாளிலிருந்து கொண்டாடப்படும். இவ்விழா முப்பத்தைந்தாம் விழாவாகும். கல்லூரி முதல்வர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் முன்னிலையில் வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் அக்டோபர்த் திங்கள் 27-ஆம் நாளன்று இக்கொண்டாட்டத்தை இராசா சர் முத்தையச் செட்டியார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்நாட்டு இளைஞர்களின் கல்வி முன்னேற்றத்தில் நாட்டமுள்ள சென்னை நூலகச் சங்கத்தினையும், சென்னை கத்தோலிக்கக் கல்விக் குழுவினையும், தென்னிந்தியாவின் சென்னைக் கல்விச் சங்கத்தையம், பாரதச் சாரணர், வழிகாட்டிகள் சங்கத்தையும், தென்னிந்தியப் பெற்றோர் சங்கத்தையும், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தையும், தட்சிண பாரத் இந்திப் பிரச்சாரச் சபையையும், சென்னைச் சுழற் குழுவையும், அரசுதவி பெறும் இடைநிலைப் பள்ளி மேலாண்மைச் சங்கத்தையும், கல்வி இலாக்காவையும், இந்தியப் பெண்கள் சங்கத்தையும், சென்னை குடிமக்கள் குழுவையும், இன்னும் பல சங்கங்களையும் தன்னுட் கொண்டுள்ள மத்தியக் கல்வி வாரக் குழுவின் தலைவர் சென்னை அதிமேற்றிராணியார் சங்கைக்குரிய டாக்டர். லேலே அவர்கள் ஆவர். இப்படி, தென்னிந்திய ஆசிரியர் சங்கம், கல்வி முன்னேற்றத்தில் நாட்டமுடைய பல்வேறு அமைப்புக்களின் ஒத்துழைப்போடு, இக்கல்வி வாரக் கொண்டாட்டத்தை ஆண்டு தோறும் கொண்டாடி வருகிறது. அக்கொண்டாட்டம் மாநிலம் முழுதும் கொண்டாடும் கொண்டாட்டமாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அக்டோபர் 27-ஆம் நாள் தொடங்கும் இக்கொண்டாட்டம் நவம்பர் 2-ஆம் நாள் முடியும். இக்கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ்வருமாறு:

1. பொது மக்கள் ஆசிரியத் தொழிலைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளுதல்.

2. பொருட் காட்சிகள், செயல் விளக்கங்கள் மூலம் பள்ளிக்கூடங்களில் எவ்விதப் பணிகள் செய்யப்படுகின்றன. என்பதைப் பொது மக்களுக்குத் தெரிவித்தல்.

இக்கல்வி வாரக் கொண்டாட்டத்தின் மூலம் பொதுமக்களுக்குத் தெரிய வருவன இவை. (1) பள்ளிக்கூடங்களின் தேவைகள், சாதனைகள், (2) அண்மையில் நடைமுறைக்கு வந்துள்ள மாற்றங்கள். (3) விரைவாக மாறும் சமுதாயத் தேவைகளை நிறைவேற்றும் கல்வி முறைப் போக்குகள். இவ்வாறாக, பெற்றோர், ஆசிரியர் இவர்களிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் பொது மக்களிடையே கல்விக்காகப் பாடுபடும் ஆர்வத்தினைத் தூண்டலாம் என்று நம்பப்படுகிறது.

நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் பணி பொதுமக்கள் பணியாகும். ஆதலால் மக்கள் தேவைக் கேற்பக் கல்வி முறை மாற்றியமைக்கப் படல் வேண்டும். தொழில் துறையும், விவசாயத் துறையும், எந்திரமயமாக்கப்படுவதாலும், விஞ்ஞானத் துறையில் வியக்கத்தகு முன்னேற்றங்கள்

* அனைத்திந்திய வானொலி நிலையத்தாரின் இசைவு பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

நிகழ்வதாலும் மக்களின் அரசியல் வாழ்க்கையில் திடீர் மாற்றங்கள் நிகழ்கின்றன. ஆதலால், பழைய முறைகள் உடனடிக் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்கோ, எதிர்காலக் கல்வி நோக்கங்களை முடிவுகட்டுவதற்கோ போதுமான வையாய் இல்லை. கல்வித் துறையில் நிகழ வேண்டிய பெருமாற்றங்கள் ஆசிரியர்களால் மட்டும் செய்தற்கியலா. அரசினர், பெற்றோர் களாயுள்ள பொதுமக்கள், ஆசிரியர்கள் ஆகிய இம்மூவரால் தாம் இம்மாற்றங்களைச் செய்து முடித்தற்கியலும். ஆதலால், பள்ளிகளும், பெற்றோர்களும்—இலவசக் கல்வி என்னும் பொருளை 35-ஆவது கல்வி வாரக் கொண்டாட் டத்தின் பொருளாகக் கொண்டது மிகவும் பொருத்தமுடையதே.

இந்திய அரசியல் அமைப்புப்படி இந்தியா ஒரு சனநாயக நாடாகும். இங்கே ஒவ்வொரு தனி மனிதனின் சுதந்தரம் பாதுகாக்கப்படும். இந்திய மக்கள் யாவருக்கும் சமுதாய, பொருளா தார, அரசியல் உரிமைகள் உண்டு. சனநாயக நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும், தன் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல் வேண் டும். ஒரு நாட்டின் மக்கள் தங்கள் பொறுப்புக் களைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கும், உரிமை களை நன்கு துய்ப்பதற்கும் துணைபுரியும் முக்கியக் கருவிகளில் ஒன்று கல்வியாகும்.

கல்வி என்பது என்ன? நிதி, மனிதசக்தி, பல்வகைத் துணைச் சாதனங்கள் இவற்றை உள்ளடக்கியதுதான் கல்வி. குறிப்பாகச் சுதந்தர இந்தியாவில், கல்வி வல்லுநர்களின் மூளையைக் குடைக்கும் மாபெரும் பிரச்சினையாகக் கல்விப் பிரச்சினையுள்ளது. இப்போது தேசிய வளர்ச்சி யோடும், பொருளாதார முன்னேற்றத்தோடும் தொடர்பு கொண்ட கல்வித் திட்டத்தை நடை முறைக்குக் கொண்டுவர வேண்டியதாயுள்ளது. இப்புதிய திட்டங்களால் புதிய சிக்கல்கள் எழு கின்றன. அர்சாங்கத்தோடு சமுதாயம் ஒத் துழைத்தாலன்றி இச்சிக்கல்கள் தீரா. ஆதலின், சமுதாயம் தன் குழந்தைகளுக்கு உரமிக்க கல்வி நல்கும் பொறுப்பினைத் தட்டிக் கழிக்க முடியாது.

நமது மாநிலம், எல்லாக் குழந்தைகளுக்குக் கல்வி நல்கும் இலட்சியத்தை அடைய வெற்றி கரமாகவும், நிதானமாகவும் பாடுபட்டுக் கொண்டு வருகிறது. தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரை நமது மாநிலம் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கிறது. 6-வயதிலிருந்து 11 வயது வரையுள்ள ஆண் குழந்தைகளில் 100-க்கு 100-பேரும், பெண் பிள்ளைகளில் 100-க்கு 75-பேரும் தொடக்கப்பள்ளிகளில் படிக்கின்றனர். 15.27—இலட்சம் குழந்தைகளுக்குத் தொடக்கப் பள்ளி களில் இலவச நண்பகல் உணவு வழங்கப்படு கிறது. இதற்காகும் மொத்தச் செலவு 245 லட்ச ரூபாய்களாகும். இதில் 147—இலட்ச ரூபாய், அரசின் பணமாகும். பெற்றோர்களின் ஒத்துழைபபோடு ஏழைக் குழந்தைகளுக்கு இல வசப் பலகைகளும், உடைகளும் வழங்கப்படு கின்றன. 14-வயதிலிருந்து 17-வயது வரையுள்ள பிள்ளைகளில் 28-சத வீதத்தினர் தாம் உயர்நிலைப் பள்ளிகளில் தம் கல்வியைத் தொடருகின்றனர். ஆதலின், அப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையையுயர்த்த வாய்ப்புண்டு, இட முண்டு. உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து பயிலும் ஆண், பெண் பிள்ளைகளின் சதவீதங்கள் முறையே 40.3: 15·8 ஆகும், ஆண்பிள்ளைகளின் கல்விக் கும், பெண் பிள்ளைகளின் கல்விக்கும் இடையே யுள்ள வேறுபாட்டினைக் குறைப்பதற்கும், உயர் நிலைப் பள்ளிகளில் சேர்க்கை எண்ணை உயர்த்துவ தற்கும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. பெற் றோர்களின் . வருமானம் எவ்வளவாயிருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல், அவர்களின் குழந்தைகளுக்கு உயர்நிலைப் பள்ளிவரை 1964-65-ஆம் ஆண்டிலிருந்து இலவசக் கல்வி வழங்க வேண்டும் என்ற அரசாங்க முடிவு அம்முயற்சி களில் ஒன்றாகும். ஆசிரியப் பயிற்சிக்கான வசதி கள் விரிவு படுத்தப்படுகின்றன. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் தகுதியை 'உயர்த்தத் தீவிர முயற்சிகள் செய்யப்படுகின்றன. குழந்தை களின் தேவைகளுக்கு ஏற்ப அமையுமாறு பாடத் திட்டங்கள் அப்போதைக்கப்போது பரி சீலனை செய்யப்படுகின்றன. ஆங்காங்கு வாழும் சமுதாயத்தினரின் முயற்சிகளைப் பள்ளி முன் னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதில் சென்னை மாநிலம் முன்னேடியாக உள்ளது. 1948-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சென்னைப் பொதுநூல் நிலையச் சட்டத்தின் கீழ் மாநில மெங்கும் பொது நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதிலும் நமது மாநிலம் முன்னேடியாக உள்ளது. அரசாங்க உதவி பெறும் தனியார்ப் பள்ளிகளில் பணிபுரியும் தகுதியுடைய ஆசிரியர்கள் பயனடை யவும் நோக்குடன் முப்பயன் திட்டத்தை நமது அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்து மற்ற மாநிலங்களுக்கு முன்னணியில் நிற்கிறது. சுருக்க மாகச் சொன்னால், கல்வித்துறையின் சில அம் சங்களில், நமது மாநிலம் இந்தியாவின் மற்றப்

பகுதிகளைவிட முன்னணியில் உள்ளது என்று பெருமையுடன் கூறிக்கொள்ளலாம்.

எனினும், நமது கல்வி முன்னேற்றத்தில் குறைகள் இல்லாமல் இல்லை. வகுப்புக்களில் மாணவர்கள் அளவு மீறிய அளவுக்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்தந்தப் பாடங்களை நடத்தத் தேவைப்படும் தகுதிபெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாயுள்ளது. கல்வித் துணைப் பொருள்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காத காரணத்தால் மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களின் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. நல்ல விளையாட்டு நிலங்கள், பொழுது போக்கு வசதிகள், ஏடுகள் நிறைந்த நூலகங்கள், வாசக சாலைகள். பரிசோதனைச் சாலைகள், தொழிற்சாலைகள் பள்ளித் தோட்டங்கள் ஆகிய தேவைகள் இப்போது மிகமிக உணரப் படுகின்றன. பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயருவதற்கு ஏற்பப் பள்ளிக் கட்டடத் திட்டம் முன்னேறவில்லை. அப்போதைக்கப் போது ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்ட போதிலும், இப்போது அவர்களுக்குத் தரப்படும் ஊதியம், அவர்களின் பொறுப்புக்களையோ, மதிப்பையோ பிரதிபலிப்பனவாயில்லை. இதன் விளைவாக, ஆசிரியத் தொழிலால், திறமையும் அறிவும் மிகுந்த இளைஞர்களைக் கவரமுடியவில்லை. மற்றப் பணிகளில் உள்ளது போல், ஆசிரியப் பணியிலும், வசதிகளும், பதவி உயர்வு வாய்ப்புக்களும் இல்லாத காரணத்தால், ஆசிரியர்களிடையே ஏமாற்றமும் தளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன, என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

மேற் சொன்ன குறைகளை நீக்கிக் கல்வி முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு உண்டென்றாலும், பெற்றோர்கள் தங்கள் பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்க முடியாது. குழந்தைகள் தக்க கல்வி பெறுவதற்குப் பொது நிதியிலிருந்து கொடுக்கப்படும் பணம் குறைவாக இருந்தால், அந்தக் குறையை நிறையாக மாற்றுதல் ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகு மல்லவா? பெற்றோர்களின் கூட்டு முயற்சி, குழந்தைகள் உயர்தரக் கல்வி பெறுவதற்குத் துணை புரியும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. நூலகங்கள், பரிசோதனைச் சாலைகள் போன்ற பள்ளித் தேவைகளை நிறைவேற்றுவதில், பெற்றோர்கள் பெரிதும் துணை புரியலாம். தொழிலின் மேன்மையைக் குழந்தைகளுக்கு உணர்த்தும் நோக்குடன் பெற்றோர்கள்; நடைமுறைச் செயல்கள் சில வற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். சுருக்கமாகச் சொன்னால் தேசியச் சீரமைப்பிற்கும், தேசிய ஒருமைப் பாட்டிற்கும் துணைபுரியும் இன்றியமையா நிலையங்களாய்ப் பள்ளிக்கூடங்களை மாற்றியமைப்பதற்குப் பெற்றோர்களின் ஒத்துழைப்புப் பெரிதும் தேவைப்படுகிறது. ★

வினாத் தொகுதி

இந்தியாவில் ஆசிரியர்களின் மதிப்புப் பற்றிய விசாரணை (Enquiry about the Status of Teachers in India) என்னும் தலைப்பின் கீழ் "விக்டாப்" ஒரு வினாத் தொகுதி (questionnaire) வெளியிட்டுள்ளது. அதில், பணியிலிருக்கும் போதே பயிற்சி, ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துதல், தண்டனைகளும், விண்ணப்பங்களும், மாற்றல்கள், விடுக்கை போன்ற தலைப்புக்களின் கீழ் பலவித வினாக்கள் தொடுக்கப் பட்டுள்ளன. அவற்றுக்கு விடையளிக்க விரும்புவோர் தெ. இ. ஆ. சங்கப் பொதுச் செயலாளர் திரு. மரியப் பிரகாசம் B. A., L. T., J. P. அவர்களுக்கு எழுதவும். உடனே வினாத்தொகுதிப் புத்தகம் அனுப்பப்படும். விடைகளைக் காலதாமதமின்றி 1-12-'66க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

The Director,
WCOTP REGIONAL OFFICE
16 A/10 Western Extension Area
NEW DELHI - 5

ஊர்வன

(REPTILES)

[பிறையணிவோன்]

முதுகெலும்புள்ள உயிர்களை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை ஊர்ந்து செல்பவைகள் (Reptiles), பறவைகள் (Birds), மீன்கள் (Fishes), நீர் நில வாழ்வுயிர்கள் (Amphibians), குட்டி போட்டுப்பாலூட்டுபவைகள் (Mammals) என்பனவாகும். இங்கே ஊர்வன பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம்.

உலகம் தோன்றிய காலத்தில் கதகதப்பான, இளஞ்சூடான கடலே நிலஉலகைப் பெரிதும் தழுவி இருந்தது. அந்த நாளில் நீரில் மட்டுமே உயிர்கள் இருந்தன. அவ்வப்போது ஏற்பட்ட நிலநடுக்கங்கள், மடிப்புகள், மாறுபாடுகள் காரணமாக நீர்ப்பகுதிகள் பிரிந்து குட்டைகளாகவும், ஏரிகளாகவும் உருவெடுத்தன. அதிலுள்ள நீரும் காலப்போக்கில் ஆவியாக, நீரில் வாழ்ந்த உயிர்கள் அழிந்துபட்டன. ஆனால் சில உயிர்கள் இந்நிலையில் நீரில் கரைந்த காற்றையே அன்றி நேரடியாகக் காற்றை இழுத்து மூச்சுவிடப் பழகிக் கொண்டன. அதன்காரணமாகச் சிறிது பொழுது நீரிலும், சிறிது பொழுது நிலத்திலும் இருக்க அவைகளுக்கு முடிந்தது. அவைகளை நீர்நில வாழ்வுயிர்கள் (Amphibians) என்றழைக்கிறோம். இவ்வகை உயிர்களிற் சில காலப்போக்கில் நிலத்திலேயே ஊர்ந்து வாழப் பழகிக் கொண்டன. அவைகளை இன்று நாம் ஊர்வன (Reptiles) என்றழைக்கிறோம்.

இன்றைக்கு ஏறத்தாழ 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் உயிர் வகைகளிலே ஊர்வன முக்கியமான இடம் பெற்றிருந்தன. அந்த நாட்களில்தான் டைனசாரஸ் (Dinosaurus) என்னும் மாபெரும் ஊரும் உயிர்கள் இப்பாரியில் உலவிவந்தன. அவை ஏறத்தாழ 100 மில்லியன் ஆண்டுகள் மறைந்துப் போகாமல் இந்நில உலகில் திரிந்து வந்தன. ஆனால் பூமியும், பூமியின் பருவங்களும் மாறிக் கொண்டே வந்தன. வெப்பமாகவும் சதுசதுப்பாகவும் இருந்த நிலம் குளிர்ச்சி அடைந்து வறண்டது. இதனால் தாவர உயிர்கள் தழைக்க முடியாமல் நிலைதிரிந்தன. அவற்றைத் தின்று செழித்து வாழ்ந்த டைனசாரஸ்களுக்கு உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டது. மேலும் டைனசாரஸ்கள் குளிர்க்குருதி (Cold Blooded) கொண்டவை; மிகப் பெரிய உடலுடையவை. எனவே தட்ப வெப்ப மாறுதல்களைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் துன்பப்பட்டன. முடிவாக அவை அழிந்துபட்டன. ஊர்வன வகையில் பெரிய பெரிய உயிர்கள் இப்படி உணவுப் பற்றுக்குறை, பருவ மாறுபாடுகள் முதலிய காரணங்களால் அழிந்துபட்டாலும், சிறுவடிவுடைய உயிர்கள் இன்றுவரையில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இன்று காணும் பாம்பு வகைகள், பல்லிகள், ஆமைகள், முதலைகள், ஓணான்கள், அரணைகள் முதலான பல்லுயிர்களும் ஊர்வனவே.

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. இந்த நடுக்கத்திற்குக் காரணம் அவற்றிடமுள்ள நஞ்சே. ஆனால் உண்மையில் பாம்புகள் எல்லாம் நஞ்சுள்ளவை அல்ல. பொதுவாகச் சொன்னால் பாம்புகள் தீமையற்றவை. உலகில் ஏறத்தாழ 2,450 பாம்பு வகைகள் உள்ளன. ஆனால் இவ்வளவு வகைப் பாம்புகளில் நல்லபாம்பு (King Cobra), கருநாகப் பாம்பு (Black Mamba), கிலுகிலுப்பைப் பாம்பு (Rattle Snake), பவழப்பாம்பு (Coral Snake) போன்ற 175 பாம்பு வகைகளே தீமைபயக்கும் நஞ்சுள்ளவை.

பாம்புகள்—உணவுப் பொருள்களைச் சேதமாக்கும் சுண்டெலி, எலி முதலான உயிர்களைத் தின்பதால் ஒரு விதத்தில் நமக்கு நன்மை ஏற்படுகிறது.

பல்லியினங்களுக்கு (Lizards), நஞ்சு

உண்டு என்னும் தவறான கருத்து சிலருக்கு உண்டு. ஆனால் பல்லியினத்தில் இரண்டு வகைகள்தாம் நஞ்சுள்ளவை. அவ்வை மெக்ஸிகோ நாட்டு அச்சந்தரு பாரிய கிலாவும் (The Gila Monster of Mexico) அருவருப்பான மெக்ஸிகன் பல்லியும் (The Mexican Beaded Lizard) ஆகும். இவ்விரு உயிர்களின் அடித்தாடையில் நஞ்சுச் சுரப்பிகள் உள்ளன. இவ்விருவகைப் பல்லியினங்கள் தவிர்த்த மற்ற எல்லாப் பல்லியின உயிர்களும் மனித உயிருக்குத் தீமை பயக்காதவை. பல்லியின உயிர்களின் வால் துண்டிக்கப்பட்டால் புதிதாக ஒரு குட்டைவால் முளைத்து பழைய நிலையை அடையும்.

முதலை வகைகளிலும் ஆமை வகைகளிலும் நஞ்சுள்ளவை ஏதும் இல்லை. டுவாடாரா (Tuatara) என்றொரு வகை ஊரும் உயிர் உண்டு. அது நியூஜிலாந்தில் மட்டுமே காணப்படுகிறது. இது காலப் போக்கினால் நிலைதிரிந்து அழிவடையாத உயிர். எனவே இதனை "வாழும் மரபற்றுப்போன உயிர்களுள்" (Living Fossil) ஒன்றாகக் கருதுகின்றனர். இதுவும் நஞ்சில்லாதது.

பாம்பிற்கு அதன் நஞ்சு கோரைப் பல்லிலுள்ள துளைவழியாக இறங்குகிறது. பல்லிலுள்ள துளையை ஒருநாளம் இணைக்கிறது. அந்த நாளம் நஞ்சுச் சுரப்பிகளோடு இணைகிறது. பாம்பு கடிக்கும்போது நஞ்சு பல்லின் வழியாகக் கடிக்கப்பட்ட உடலினுள் ஏறுகிறது. எல்லாப் பாம்பின் நஞ்சும் ஒரே தன்மையது அல்ல. சில வகைப் பாம்பின் நஞ்சு நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும். மற்றும் சில வகைப் பாம்பு உடலிலுள்ள குருதியைப் பாதிக்கும் சில இடங்களில் பாம்புகளை ஆராய்ச்சிக்காக வளர்க்கிறார்கள். பாம்பின் நஞ்சை எடுத்துச் சீர்செய்து மருந்துகள் தயாரிக்கிறார்கள். அவை மனித நோய்கள் சிலவற்றைப் போக்க உதவுகின்றன. பாம்பின் நஞ்சை, நஞ்சு முறிக் குருதிநீர் (Serum) தயாரிக்கவும் பயன்படுத்துகிறார்கள்.

ஆப்பிரிக்க, துப்பும் நல்லபாம்பு (African spitting Cobra) என்றொருவகை விந்தையான பாம்புண்டு. இதன் நீளம் ஏறத்தாழ மூன்று நான்கு அடியிருக்கும். இதற்கு இரையாகும் உயிரையோ, பகையோ இதனை அண்டினால் இது தன் நச்சுப் பல்லிலிருந்து நஞ்சுத்துளிகளை எதிரே இருக்கும் உயிரின்மேல் கக்கும். அதே நேரத்தில் மூச்சுக் காற்றையும் வெளிவிடும். நஞ்சுத் துளிகள் பகையாளியின் கண்களில் போய் விழுந்து சேதத்தை விளைவிக்கும்.

நஞ்சில்லாப் பாம்புகள் தங்களுக்கு வேண்டிய இரையைப் பிடிப்பதற்குத் தங்கள் உடலைப் பயன்படுத்துகின்றன. உடனே விழுங்க முடியாத அளவு பெரிய உயிரை விழுங்க, அவற்றின் உடலில் சுருள் கம்பியைப் போலப் பின்னி உடலிலுள்ள எலும்புகளை நொறுக்கி, உயிரைப் போக்கி அப்படியே விழுங்குகின்றன. உருவம் பெருத்த உயிர்களை விழுங்குவதற்கு ஏற்றாற்போல் பாம்பின் இரு தாடைகளும் அசையும் தன்மையுடையனவாக இருக்கின்றன. பாம்புகள் மென்று உணவைத் தின்பதில்லை. அப்படியே விழுங்குகின்றன. ஏனென்றால் அவற்றிற்கு அரைக்கும் பற்கள் இல்லை. பாம்புகளில் மிகப் பெரிய வகை 30 அடி அளவுக்கு இருக்கும். அதற்கு அனகொண்டா என்று பெயர். பாம்புகளுக்கு கண்ணிமைகளோ காதுகளோ இல்லை. ஒலியைப் பாம்புகள் பூமியின் அதிர்வு (Vibration) மூலமாக அறிகின்றன. இமைகள் இல்லாது போனாலும் கண்ணுக்குப் பாதுகாப்பாக ஒளி ஊடுருவும் (Transparent) மூடிகள் பாம்புகளுக்கு உண்டு.

ஊர்வன வகையில் பல உயிர்கள் பிளந்த நாவைப் பெற்றிருக்கின்றன. அவைகள் 'ருசி' அறியப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் நாம் நமது நாவைப் பயன்படுத்துவதுபோல அவை பயன்படுத்துவது இல்லை. அவை தங்களுடைய நாவைத் திடீரென்று வெளியே நீட்டுகின்றன. மேலும் கீழும் ஆட்டுகின்றன.

அப்போது காற்றிலுள்ள 'ருசியை' அறிகின்றன. திரும்பவும் நாவை உள்ளிழுக்கும் போது அந்த 'ருசி' துடைக்கப்படுகிறது. இப்படிச் செய்வதன் மூலமே அருகில்

அனைத்திந்திய ஆசிரியர் மாநாடு

40-ஆவது அனைத்திந்திய ஆசிரியர் மாநாடு 26-12-65-லிருந்து 31-12-65-வரை அலகாபாத்தில் நடைபெற இருக்கிறது. இம்மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்து செல்ல விரும்பும் ஆசிரியர்கள் முதலில் 6 ரூபாய்கள் கட்டி டெலிகேட்டுகள் ஆக வேண்டும். (டெலிகேட் கட்டணம், ரூ. 5; தபாற்செலவு ரூ. 1) அதன் பிறகே அவர்களுக்கு ரயில்வே கன்செஷன் பாரம்கள் அனுப்பப்படும். இது சம்பந்தமான விவரங்களுக்குத் தெ. இ. ஆ. சங்கப் பொதுச் செயலாளர் திரு. மரியப் பிரகாசம், B. A. L. T., J. P. அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். அவரது இல்லத்து முகவரி இதே பத்திரிகையில் இன்னொரு இடத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

இருக்கும் பொருள் என்ன என்பதை அறிகின்றன. ஊர்வனவற்றின் பிளந்த நாக்குகள் மிக மென்மையானவை ஆற்றல் கொண்டவை. இதுபோன்ற பிளந்த நாவினாலே பாம்புகள் வெகு தொலைவிலுள்ள நீர்நிலைகளைக் காற்றின் மூலம் 'ருசி' அறிந்து கண்டு கொள்கின்றன.

ஆமை: முதலை, அலிகேட்டர் முதலான உயிர்கள் பொதுவாகமெள்ளஊர்ந்துசெல்லும். ஆனால் இரை தேடுங்கால் மிக விரைவாகச் செல்லும். குட்டி முதலைகள் இன்னலில்சிக்கித் தவிக்கும்போது ஒரு வகையாக ஓசையிடும். அப்போது முதலையின் விரைவைக் காண வியப்பாக இருக்கும். அலிகேட்டரும் (Alligator) முதலையும் பார்ப்பதற்கு ஏறத்தாழ ஒன்றாகத் தோன்றும். ஆனால் அலிகேட்டரின் தலை குட்டையாகவும், பட்டையாக மூக்குப் பகுதி அகலமாகவும் இருக்கும். முதலையின் தலை நீளமாகவும் மூக்குப் பகுதி கூராகவும் இருக்கும்.

பல்லி இனத்தில் இன்று மிகப் பெரிது கொமோடோ வேதாளம் (Komodo Dragon) அது பசிபிக் கடலிலுள்ள கொமோடோ தீவில் வாழ்கிறது. ஏறத்தாழ 10 அடி நீளம் இருக்கும். நாய் அளவு விலங்குகளை அது கவர்ந்து செல்ல வல்லது. இன்றுள்ள பல்லிகள் பொதுவாக மிகச் சிறிய வடிவுடையவை. எட்டு, பத்து அங்குல நீளமுள்ள கொய்சகப் பல்லி (Frilled or Bearded Lizard) தன் கழுத்திலுள்ள தோல் மடிப்புகளை நீட்டி விசிறியைப் போல அச்சுறும் போது விரித்துக் காட்டும். இப்படிச் செய்தால் தலை மூன்று பங்கு பெரியதானதுபோலத் தெரியும். அதன் எதிரிகள் இம்மாற்றத்தைக்கண்டு அஞ்சி ஒதுங்கும். கண்ணாடிப் பாம்பு (Glass Snake) என்று அழைக்கப்படும் ஒரு வியப்பான பல்லி இருக்கிறது. இது பார்வைக்குப் பாம்பைப் போலவே இருக்கும்; ஆனால் பாம்பல்ல. இது அமெரிக்க நாட்டில் காணப்படுகிறது. பாம்புகளுக்கில்லாத கண் இரப்பையும், காதுத் துளைகளும் இதற்கு இருக்கின்றன. இதைப் பிடித்தால் கண்ணாடி உடைவது போல இதன் வால் உடைந்து போகிறது. இப்படி உடைவதால் இது அழிந்துபோவதில்லை. உடைபட்ட வால் திரும்ப முளைத்து விடுகிறது.

பலவகை ஓணான்களும் அரணைகளும் பல்லியினத்தைச் சேர்ந்தவையே. ஓணான்கள் தலையை மேலுங்கீழும் ஆட்டுவது தம் இணையைத் தம்மால் ஈர்க்கவும் மற்ற ஆண் ஓணான்களை அச்சுறுத்தி விரட்டியடிக்கவுமேயாகும். ஓணான்கள் பூச்சி, புழு, சிலந்தி போன்ற உயிர்களை உணவாகக் கொள்கின்றன. பச்சை ஓணான் அல்லது பச்சோந்தி (Chameleon) என்றழைக்கப்படும் ஊரும் உயிரினம் தன் வண்ணத்தைச் சுற்றுச் சூழலுக்குத் தக்கவாறு தன் உடலிலுள்ள செதில்களின் உதவியால் மாற்ற வல்லது. ஐக்கிய நாட்டின் தென் பகுதியில் கொம்புப்பல்லிகள் (Horned Lizards) இருக்கின்றன. அவற்றிற்குத் தட்டையான உடலும், குட்டையான கால்களும், தலையிலும் உடலிலும் கொம்பு

போன்ற முட்களும் இருக்கும். இவற்றின் கண்களின் முன்பக்க முனையிலிருந்து சில அடிகள் தொலைவிற்குக் குருதித் துளி களைப் பீச்சும் வியப்பான பழக்கம் கொண்டவை.

இனி, ஆமைகளைப் பற்றிச் சிறிது ஆய்வோம். கடலாமைகள் கடலிலேயே தங்கள் வாழ்நாளைக் கழிக்கின்றன. பெண் கடலாமைகள் முட்டையிடுவதற்கு மட்டும் கடற்கரைக்கு வருகின்றன. அட்லாண்டிக், பசிபிக் கடலின் வெப்ப மண்டலப் பகுதியில் வாழும் கடலாமைகள் கோடைக் காலத்தின் முன்பகுதியில் கடற்கரையை நோக்கி வருகின்றன. உயர்வேலியேற்றத் திஞல் (High Tide) கடல் நீர் வாராத இடத்திற்குப் பெண் கடலாமைகள் செல்கின்றன; மண்ணைக் குடைகின்றன; குழியாக்குகின்றன. இப்படிக் குடைந்தெடுத்த குழியில் ஒரு பெண் ஆமை இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் நூறிலிருந்து நூற்றைம்பது முட்டைகள் இட்டு விடுகிறது. பிறகு மணலைக் கொண்டு முட்டைக் குழியை மூடிவிட்டுத் தான்வந்த வழியே சென்றுவிடுகிறது. மணலைக் கொண்டு முட்டைமேல் கோழியைப்போலக் குந்தி அவ்வயங் காப்பதில்லை. வெப்பமான ஈர மணலில் முட்டை வெடித்து ஆமை வெளி வருகிறது. கடலாமைகளையும் அதன் முட்டைகளையும் உணவாகக் கொள்ளுகிறார்கள். கடலாமை ஏறத்தாழ 150-லிருந்து 200 இராத்தல் வரை இருக்கும்.

குழைமம் (Plastic) கண்டுபிடிப்பதற்கு முன்னர் சிலவகை ஆமைகளின் ஓடுகளிலிருந்து பித்தான்கள் (Bottons) மூக்குக் கண்ணாடி பொருத்தும் சட்டங்கள் முதலான பொருள்கள் செய்து வந்தார்கள். இன்று ஆமை ஓட்டின் பயன்கள் குறைந்து வருகின்றன. மருந்துகளுக்கு இன்றும் நாட்டு மருத்துவர்கள் ஆமை ஓட்டைப் பயன்படுத்துகின்றனர். சிலாசித்து என்னும் ஆமை ஓடு கலந்த மருந்தைச் சிந்துவெளியில், 6000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

ஆமைகள் பொதுவாக நீரிலுள்ள போதே உணவருந்துகின்றன. பூச்சிகள், புழுக்கள், சிறுமீன்கள், நீர்த்தழைகள் முதலானவற்றைத் தின்றே ஆமைகள் உயிர் வாழ்கின்றன. ஆமைகள் வீட்டில் வந்தாலே கேடு என்னும் கொள்கை நம் மக்களுக்கு உண்டு. ஆனால் ஆமைகளை வளர்த்தால் அவை அன்புடன் பழகக் கூடியவை. கைகளிலிருந்து உணவுப் பொருள்களைப் பெற்றுத் தின்னும். ஆமைகள் குட்டை, குளம் ஏரி, கிணறு போன்ற நீர்நிலைகளில் வாழ்கின்றன. ஆமை ஓடுகள் இனத்திற்கு ஏற்றாற்போல் புள்ளிகளோடும், கோடுகளோடும், வண்ணங்களோடும், உருவமாறுபாடுகளோடும், முட்களோடும் காணக் கிடைக்கின்றன. குழி ஆமைகள் (Gopher Tortoises) மணற்பாங்கான பகுதிகளில் தோண்டித் துளைத்து மண்ணுக்கடியில் பாதையையும் ஓர் அறையையும் அமைத்துக் கொண்டு வாழுகின்றன. ஆமையினுடைய கறியைப் பழந்தமிழர்கள் புலவு செய்து உண்டதாக இலக்கியங்களில் காண்கிறோம். ஆமையைக் கிணற்றில் போட்டு வளர்த்தால் கிணற்றின் வட்டைக்குச் சேதம் ஏற்படும். அதனாற்றான் 'ஆமை புகுந்த கிணறு' கெடும் என்னும் பழமொழி உலவுகிறது. ஆமைகள் ஒன்றை ஒன்று தாக்கும்போது தலைகீழாக கவிழ்க்க முயற்சி செய்கின்றன. ஒன்று மற்றொன்றைக் கவிழ்த்தால் அது போரில் வெற்றி பெறுகிறது. கவிழ்க்கப்பட்ட ஆமையால் சிறிது நேரம் ஒன்றும் செய்ய இயலாது. திரும்பி நடக்க அதிக நேரம் பிடிக்கும்.

விலங்கினத்திலேயே அதிககாலம் உயிர் வாழும் உயிர் ஆமைதான். ஏறத்தாழ 350 ஆண்டுகள் சில ஆமைகள் வாழ்வதாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

எல்லா ஊரும் உயிர்களும் குளிர்க் குருதி கொண்டவைகளே.

★

அமெரிக்காவில் அயோவா, கான்ஸாஸ், மினஸோட்டா, மாநிலங்களிலே பண்ணை வீடுகளில் வசித்து வருபவர்கள் இந்தியாவில் குஜராத், மத்யப் பிரதேசம், மேற்கு வங்கம் முதலிய மாநிலங்களுக்கு வருகை தருவது அநேகமாக ஒரு உலகிலிருந்து வேறு உலகுக்குச் செல்வது மாதிரி இருக்கிறது. உண்மையில் 16 இளம் அமெரிக்கர்களுக்கு-ஆண்கள் 8 பேர், பெண்கள் 8 பேர்-இந்த அனுபவம் தான் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் இந்தியா வந்து சேர்ந்த இந்தப் 16 பேர்களும் 12 மாநிலங்களிலே பண்ணைக் குடும்பங்களில், அக் குடும்பத்தினர்களைச் சேர்ந்தவர்கள் போல, ஆறு மாதம் தங்கியிருக்கப்போகின்றனர்.

பண்ணை இளைஞர் திட்டம்

இந்த ஒப்பந்த மக்களுடன் மக்கள் பழகும் திட்டம், சர்வதேசப் பண்ணை இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியே யாகும். இத்திட்டத்தின் கீழ் இது வரை 220 இந்தியப் பண்ணை இளைஞர்கள் அமெரிக்காவுக்குச் சென்று வந்துள்ளனர் : 92 அமெரிக்க இளைஞர்கள் இந்தியாவுக்கு வந்துள்ளனர்.

" இந்த மூன்று மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் நாங்கள் ஆறு வாரம் தங்கியிருப்போம்; கிராம சேவக் பயிற்சி நிலையத்தில் மூன்று வாரங்கள் இருப்போம், இன்னொரு மூன்று வாரம் வெவ்வேறு இந்தியக் குடும்பங்களில் இருப்போம்" என்று விளக்கினார் 20 வயதான வில்லிஸ் ஆல்ட். இன்டியானா மாநிலத்தைச் சேர்ந்த வில்லிஸ் மத்தியப் பிரதேசம், தமிழகம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்குச் செல்கிறார். " இந்தப் பிரதேசங்களில் இருக்கும் பலன் நீடிப்புப் பயிற்சித் திட்டங்கள், பண்ணைப் பிரச்னைகள் ஆகியவற்றை என் மாநிலத்திலுள்ளவையுடன் ஒப்பு நோக்க இது நல்ல வாய்ப்பு அளிக்கும்; நான் சில புதிய யோசனைகளைக் கூறுவேன், சில புதிய கருத்துக்களை நானும் ஏற்று ஊருக்குக் கொண்டு போவேன்."

வில்லிஸ் இப்பொழுது பர்டு பல்கலைக் கழகத்தில் மூன்றும் ஆண்டு படிக்கிறார். மண் வளம் பயிர் இயலில் பி. எஸ்ஸி. பட்டம் பெறப் படிக்கிறார். பண்ணை நிர்வாகத்தைத் தாம் தொழிலாகக் கொள்ள அவர் திட்டமிட்டுள்ளார். ஆனால் இந்தியாவுக்கு அவர் வருகை தந்திருப்பதன் நோக்கம், " மக்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடி அவர்கள் பிரச்னைகளை உணர்ந்து அவர்களை அறிந்து கொள்வதாகும்" என்கிறார் அவர்.

சர்வதேசப் பண்ணை இளைஞர் பரிமாற்றத் திட்டம் 1948-ல் தேசிய 4-எச் சங்கத்தின் ஒரு பிரிவாகத் துவக்கப் பெற்றது. பிற நாட்டு மக்களுடன் வசித்து அவர்கள் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிப்பது தான் இதன் நோக்கம். 4-எச் சங்கம் அமெரிக்கா நெடுகிலும் 10 முதல் வயது வரையுள்ள இளைஞர்களுக்குச் செயலாற்றுகின்றன.

" நான் எட்டு ஆண்டுகள் 4-எச் சங்கம் உறுப்பினராக இருந்தேன் " என்கிறார் 22 வயதான கரேன் டாக்கென்டார்ஃப் அயோவா மாநிலத்தைச் சேர்ந்தவர் இவர். அயோவா மாநிலப் பல்கலைக்கழகத்திலிருந்து இப்பொழுதுதான் பட்டம் பெற்றவர் கரேன்க். அயோவா மாநிலத்துக்கு குடும்பப் பொருளியல் நிபுணராக இருக்கிறார் இப்பெண்மணி. இந்தியாவிருந்து திரும்பிச் சென்ற பிறகு தமது வேலைக்குச் சென்றுவிடுவார், ஏற்கெனவே அவர் பலன் நீடிப்புப் பணி செய்திருக்கிறார். ஆந்திரப் பிரதேசம், பரோடா முதலிய இடங்களில் உள்ள பயிற்சித் திட்டங்களை நேரில் காண அவர் ஆவலுடன் இருக்கிறார். இந்தத் திட்டங்களிலிருந்து தம் பணிக்குப் பயனுள்ள பல அம்சங்களை ஏற்றுக் கொள்ள நினைக்கிறார். அதே சமயத்தில் இங்குச் சற்றுக் கல்விப் போதனையும் செய்ய எண்ணம் கொண்டுள்ளார்.

எட்லர்டு மைஸ் இலினாய்ஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர் ; 22 வயதானவர் ; வேளாண்மைப் பொருளியலில் பட்டம் பெற்றவர். " பட்டப் பிற்கால வேலை"

செய்த பிறகு வேளாண்மையில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளார். நான் பலன் நீடிப்புப் பணி செய்துள்ளேன். எனவே இங்குப் பின் பற்றப்படும் முறைகளை நான் ஆராயக் கூடும்'' என்று அவர் விளக்கினர். தமது இந்திய அனுபவம் தமக்கு ஊர் திரும்பியதும் பலனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிருர். மைசூர், பீகார், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருக்கையில், தமது சொந்த அறிவையும் அனுபவத்தையும் சற்றுப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் எதிர்பார்க்கிருர். ஆனல் இது ஒரு புறமிருக்க, இந்த ஆறு மாதகாலம், உலகின் இன்னெரு பகுதியைப் பற்றி நன்ருக உணர்வதற்கு மாபெரும் உதவியாக இருக்கும் என்பது அவருடைய திடமான நம்பிக்கை. நான் நினைப்பது மாதிரி ஏன் நினைக்கிறேன் என்பதை நான் அறிய விரும்புகிறேன். மற்றவர்களை அறிந்து கொள்வதால் இதை நான் தெரிந்து கொள்ள முடியும் என்றும் கருதுகிறேன்'' என்ருர்.

இந்தியாவுக்கு வந்திருப்பவர்களில் பெரும்பாலோர் பண்ணைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 15 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அமெரிக்க மத்தியமேற்குப் பிரதேசத்தில் இருப்பவை இந்த மாநிலங்கள். இவர்களுடைய சராசரி வயது 22. இவர்களில் 2 நர்சுகள், பல எதிர்கால விவசாயிகள், குடும்பப் பொருளியல் நிபுணர்கள் ஒரு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஒரு சமூக ஊழியர் ஆகியோர் இருக்கின்றனர். இவர்கள் பல ஆண்டுகள் 4-எச் சங்க உறுப்பினர்களாக இருந்தவர்கள்.

இவர்கள் தங்கியிருக்கும் குடும்பங்களிலே ஆங்கிலம் நன்ருகப் பேசக் கூடிய, உணரக் கூடிய ஒரு மகனே மகளோ இருப்பார். இக்குடும்பங்களை மாநில அரசாங்கங்கள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள்,கிராம சேவக் பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள், வட்டசாயத் சமிதிகளின் தலைவர்கள் ஆகியோர் மூலம் ஜாக்கிரதையாகத் தெரிந்தெடுக்கின்றனர். வருகை தந்திருக்கும் அமெரிக்கர்கள் விருந்தாளிகளாகக் கருதப்படமாட்டார்கள். குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே அவர்கள் இருந்து பண்ணை வேலைகளிலும், வீட்டு வேலைகளிலும் கிராமப் பலன் நீடிப்புத் திட்டங்களிலும் பங்கு கொள்வர். அதனல், இந்திய வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. வேறு எவருக்கும் கிட்டாத அரிய வாய்ப்பு இது. இதற்குப் பதிலாக அவர்கள் தாம் தங்கியிருக்கும் குடும்பத்துக்குப் புதிய கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் சொல்லிக் கொடுப்பர். இதுவே உண்மையான கருத்துப் பரிமாற்றம்; மக்களிடையே நல்லுணர்வு வளர்ச்சி. துவக்கத்திலேயே இரு தரப்பிலும் விட்டுக் கொடுத்து, பரஸ்பரம்

ஓர் அறிவிப்பு

ஆசிரியர்கள் கல்வி தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், பொருத்தமான கருத்துக்களைத் திருத்தமாக வெளியிடவும் விரும்பினல், தென்னிந்திய ஆசிரியர்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் திகழும் திருவாளர் மரியப்பிரகாசம் J. P. அவர்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அமல நிலையம்,

6, கச்சேரி ரோடு,

மயிலை, சென்னை - 4.

புரிந்து கொள்வதன் மூலம் தடங்கல்களை நீக்கிவிடலாம்.

அமெரிக்காவுக்குத் திரும்பியதும் இந்த 16 அமெரிக்கர்களில் ஒவ்வொருவரும் தமது இந்திய அனுபவங்களைப் பிறருக்கு எடுத்துக் கூறுவர். இது சர்வதேசப் பண்ணை இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று. இத் திட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தத்தம் மாநிலங்கள் நெடுகிலும் பயணம் செய்து விவசாயிகள் சங்கங்கள் பொது நிலையங்கள், வர்த்தக சபைகள், இளைஞர் கழகங்கள் முதலியவற்றில் பேசுவர்; இந்தியாவை அமெரிக்கருக்குச் சொற்களாலும், புகைப்படங்களாலும் விளக்கிக் கூறுவர். இந்தியாவில் அவர்கள் தங்கியிருக்கையில், கூட வசிப்பவர்களுக்கும், கூட வேலை செய்பவர்களுக்கும், நேரில் சந்திப்பவர்களுக்கும் அமெரிக்காவை அவர்கள் விளக்கிக் கூறுகின்றனர். இதே பணியைத்தான் அவர்கள் அமெரிக்கா திரும்பியதும் இந்தியா விஷயமாகச் செய்யப் போகின்றனர். ★

ஆசிரியர்களின் மதிப்புத் தொடர்பாக நடத்தப்பட்ட தேசிய கருத்தரங்கம்

கல்வி ஆணைக் குழுவால், ஆசிரியர்களின் மதிப்புத் தொடர்பான தேசியக் கருத்தரங்கம் ஒன்று தில்லியில் கூட்டப்பட்டது. அதில் ஏறத்தாழ 50 ஆசிரிய அமைப்புக்களின் நிகராட்கள் கலந்து கொண்டனர். அக்கருத்தரங்கம் செப்டம்பர் 29, 30-ஆம் நாட்களிலும், அக்டோபர் முதல் நாளிலும் நடந்தது. ஆசிரியர்களின் நலனோடு தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி இக் கூட்டத்தில் பேசப்பட்டன. வசதி கருதி இப்பிரச்சினைகள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. அவை கீழ் வருமாறு:

(1) ஆசிரியர்களின் சம்பளங்கள், பஞ்சப் படி, நலம் நாடும் சேவை, ஓய்வு காலப் பயன்கள்.
(2) ஆசிரியர்களின் சேவைத் தனி நிலைமைகள்.
(3) ஆசிரியர்கள் ஆற்றும் பணியின் நிலைமைகள்.
(4) ஆசிரிய அமைப்புக்களின் பங்கும், பணிகளும்.

மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் மேற்குறித்துள்ள நான்கு பகுதிகளாகப் பிரிந்து அவற்றின் முக்கிய அம்சங்கள் குறித்து மிகவும் விரிவாக ஆராய்ந்தனர். அவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் விளைவாகப் புதுக் கருத்துக்களைத் தெரிவித்தனர். அக்கருத்துக்கள் கல்வி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும்.

ஆசிரியர்கள் மதிப்புத் தொடர்பான பிரச்சினைகள் புதியனவல்ல. அவைபற்றிப் பல்வேறு ஆசிரிய மாநாடுகளில் பேசப்பட்டிருக்கிறது. ஆசிரியத் தொழிலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாக இயங்கும் ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்டது கல்வி ஆணைக்குழு அவர்கள் சமுதாயத்தில் ஆசிரியர்களுக்குப் புனர் வாழ்வு அளித்தல் வேண்டும் என்னும் உண்மையை உணராமல் இல்லை. கல்வி ஆணைக்குழு, ஆசிரிய அமைப்புக்களுக்குப் பெருமை மிக்க மதிப்பினை அளித்துளது என்னும் உண்மையில்தான் இம் மாநாட்டின் சிறப்பே அடங்கியுள்ளது. ஆசிரியர்களின் மதிப்பினை உயர்த்தும் நோக்குடன், பொறுப்புமிக்க கருத்துக்களை அறிவிப்பதற்கும், நடைமுறைக்கேற்ற நடவடிக்கைகளைத் தெரிவிப்பதற்கும் இவ்வமைப்புக்களுக்கு ஒரு நல்வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. கல்வி ஆணைக் குழுக்களின் வரலாற்றிலேயே இஃது ஒரு இணையற்ற அம்சமாகும்.

இம்மாநாட்டினுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து அதனை வெற்றிகரமாக நடத்திய பெருமை கீழ்க்கண்டவர்களைச் சாரும்.

(1) குமாரி S. பனந்திகர், ஆணைக்குழு உறுப்பினர்.
(2) திரு J. P. நாய்க், ஆணைக்குழுவின் உறுப்பினர்-செயலாளர்.
(3) திரு M. D. பால், துணைக்கல்வி அறிவுரையாளர், இந்திய அரசு. ★

கல்வி எதிரொலி
(EDUCATION ECHO)

தமிழாக்கம் : **ஆ. குப்புச்சாமி**

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் உலகக் கூட்டிணைப்பு (World Confederation of Organisations of the Teaching Profession.)

கொலம்பியன் ஆசிரியர்களால் நடத்தப்பட்ட வெற்றிகரமான வேலை நிறுத்தம்

கல்வியின் நிலையுயர கொலம்பியன் ஆசிரியர்களால் நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றியைத் தந்துளது என்ற செய்தி "விக்டாப்பிற்கு" வந்துளது.

எதிர்காலத்தில் கொலம்பியன் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக, "விக்டாப்பில்" அங்கம் வகிக்கும் சங்கமான கொலம்பியானு ஆசிரியச் சங்கத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்கு, "விக்டாப்" செயலகத்தைச் சேர்ந்த ஒருவர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில், பொகோடோவிற்கு வானூர்தியில் வந்து சேர்ந்தார்.

ஆசிரியர்கள் தங்கள் இரண்டுவார வேலை நிறுத்தத்தை ஆகஸ்ட் 31-ஆம் நாள் தொடங்கினுர்கள். அப்போது தங்கள் இயக்கத்திற்குப் பேராதரவு தருவதற்கு,

---

"விக்டாப்" ஆப்பிரிக்க வட்டார அலுவலகத்தின் இயக்குநரான E. பென்னெட் காலே அவர்கள் எதியோப்பியாவை விட்டுப் போவதற்குமுன், மேன்மை தங்கிய எதியோப்பிய மன்னர் முதலாம் ஹைலிசலாசி அவர்களைப் பார்த்து, "நன்றி போய் வருகிறேன்" என்று கூறுவதைப் படத்தில் பார்க்கலாம். ஆகஸ்டுத் திங்களில், ஆடிஸ் அபாபாவில், "விக்டாப்" 14-ஆம் பேராள் கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்தவர் திருவாளர் பென்னெட் அவர்கள். "விக்டாப்" பேராள் கூட்டம் ஆடிஸ் அபாபாவில் நடந்த போது தாம் இல்லாதது குறித்து எதியோப்பியப் பேரரசர் வருந்தினுர். மேலும் அவர் கல்வியில் தமக்கு மிக்க ஆர்வம் உள்ளதென மீண்டும், மீண்டும் கூறினுர். "எல்லா வகையான முன்னேற்றத்திற்கும் கல்வியே அடிப்படை என்று நான் நம்புகிறேன்" என்று மன்னர் "விக்டாப்" நிகராளிடம் (Representative) கூறினுர். "விக்டாப்" பேராள் கூட்டத்தில் மன்னர் கலந்து கொள்ளாதது குறித்துத் திருவாளர் காலேயும் வருத்தந் தெரிவித்தார். "பேராள் கூட்டத்திற்குக் தாங்கள் அனுப்பி வைத்த ஊக்கமிக்க செய்தியினைக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்" என்று பென்னெட் அவர்கள் மன்னரிடம் கூறினுர்.



மாணவர்கள் வீட்டில் இருக்கவேண்டும் என்றும், பெற்றோர்களும், முன்னாள் மாண வர்களும் வகுப்பறைகளில் சந்திக்கவேண்டும் என்றும் ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டனர்.

ACPES—என்ற அச்சங்கத்துடன் கொலம்பியாவிலுள்ள இன்னும் மூன்று சங்கங்களும், வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டன. இச்சங்கங்கள் ஆசிரியர்களின் சம்பளங்களைத் திருப்பித் தரவேண்டும் என்றும், நாட்டிலுள்ள கல்விச் சங்கங்களால் கல்வியமைச்சருக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ள உரிமைக் கோரிக்கைகளை ஆய்ந்து பார்த்தல் வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக் கொண்டன.

ஆசிரியர்களின் பயிற்சியையும், சேவைக்காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும் நியாயமான சட்டமொன்று செய்யவேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டனர். ஆசிரியத் தொழிற் பயிற்சியையும், முன்னேற்றத்தையும் அரசு ஆதரிக்கவேண்டும் என்பதும் அவர்களது கோரிக்கையாகும்.

வேலை நிறுத்தம் தொடங்கியபோது "விக்டாப்" தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார் அவர்கள் கொலம்பியாவு கல்வி யமைச்சருக்கு ஒரு தந்தி யடித்தார். அத்தந்தியில் அவர் கொலம்பியாவிலுள்ள இளைஞர்களின் நன்மைக்காக அமைச்ச ரவர்கள் ஆசிரியப் பிரதிநிதிகளைச் சந்திக்கவேண்டும் என்றும், அவர்கள் கூறும் குறைகளை ஆய்ந்து பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஆசிரியர்களின் மதிப்பையும், கல்வியின் தரத்தையும் உயர்த்துதற்கு "விக்டாப்பில்" அங்கம் வகிக் கும் சங்கங்கள் செய்யும் முயற்சிகளை "விக்டாப்" ஆதரிக்கிறது என்றும் அத்தந்தியில் குறிப்பிடப் பட்டிருந்தது.



உகாண்டா ஆசிரியச் சங்கம் காண்டல் கேட்டல் துணைப் பொருள்கள் தயாரிப்பது தொடர் பான ஒரு போட்டி நடத்தியது. அப்போட்டியில் கலந்து கொண்டு முதலில் வந்த ஆசிரியருக்கு உ. ஆ. சங்கத்தின் தலைமைச் செயலாளர் ஜான் கிடாக்கா அவர்கள் "விக்டாப்" பரிசினை வழங்குவதைப் படத்தில் பார்க்கலாம். "விக்டாப்" குழுவின் உறுப்பினரும், உகாண்டாவைச் சேர்ந்தவருமான W. சென்டிசா கஜுபீ அவர்கள் இடப்பக்கத்தில் அமர்ந்துள்ளார்.

முதியோர் கல்வி மாநாடு

ஆடிஸ் அபாபாவில் நடந்த பேராள் கூட்டத்தைத் தொடர்ந்து ஐந்தாவது "விக்டாப்" பன்னாட்டு முதியோர் கல்வி மாநாடு நடந்தது. முதியோர் கல்விச் செயல் முறைத் திட்டங்களை முன்னேற்றுவதற்கு ஆசிரிய அமைப்புக்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பனவற்றை விவரிக்கும் கைப்புத்தகம் ஒன்றைத் தயாரிப்பதற்கான திட்டங்களை அம்மாநாடு வகுத்தது.

1966-ஆம் ஆண்டில், கொரியாவிலுள்ள சிபோலில், "விக்டாப்" பேராள் கூட்டம் நடப்பதற்கு முன்பு, தொழில் நுணுக்கத் தொழிற்சாலை ஒன்றை நடத்துதற்கான அடிப்படை ஏற்பாடுகளையும் அம்மாநாடு செய்துளது. ஆசிரிய அமைப்புக்களிலுள்ள தலைவர்களுக்கு அவர்கள் சேவைக் காலத்திலேயே அறியாமையை ஒழிக்க



ஆடிஸ் அபாபாவில், பேராள் கூட்டம் செவ்வனே நடைபெறுவதற்கு அமைக்கப்பட்ட செயலகத்தில், பணிபுரிந்த ஊழியர்களில் சிலரை இப்படத்தில் பார்க்கலாம்.

உதவும், அமைப்புத் தொடர்வான தொழில் நுணுக்கங்கள் அத்தொழில் சாலையில் சொல்லிக் கொடுக்கப்படும்.

21-நாடுகளிலிருந்து வந்த 57 பேர்கள் அம்மாநாட்டிற் கலந்துகொண்டார்கள். முதியோர் கல்வி, இளைஞர் நடவடிக்கைகள் யுனெஸ்கோ இலாக்காவின் இயக்குநர் A. டெலியான் அம்மாநாட்டிற் சொற்பொழி வாற்றினார். ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அறியாமையை அகற்றும் செயலில் இறங்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். டெலியானின் சொற்பொழிவைத் தொடர்ந்து, அம்மாநாட்டில் பங்கேற்ற பேராட்கள் அறியாமையை அகற்றுதல், பொது முதியோர் கல்வி ஆகிய

செயல் முறைத் திட்டங்களில் ஆசிரிய அமைப்புக்களைத் திறம்பட ஈடுபடுத்துவது தொடர்பான புதுத் திட்டங்களைத் திட்டினர்.

முதியோர்க் குரிய அறியாமை அகற்றுஞ் செயல் முறைத் திட்டங்களில் ஆசிரிய அமைப்புக்களை ஈடுபடுத்துவது தொடர்பான சிறப்பு ஆராய்ச்சிகள் கென்யா விலும், தாய்லாந்திலும் "யுனெஸ்கோவின்" ஒத்துழைப்போடு "விக்டாப்பால்" செய்யப்பட்டன. இம்மாநாட்டில் அவ்வாராய்ச்சிகளின் விவரங்களடங்கிய அறிக்கை படிக்கப்பட்டது. அவ்வாராய்ச்சிகளை முறையே கென்யாவிலும், தாய்லாந்திலும் நடத்தியவர்களின் பெயர்கள் கீழ்வருமாறு :

1. கிறிஸ்டியன் R. A. கோல், பல்கலைக் கழக எல்லைக்குப் புறம்பான படிப் பிலாக்கா இயக்குநர், பல்கலைக் கழகக் கல்லூரி, சியர்ரா லியோனி.

2. ஆர்ட்டிமியோ C. விஸ்காண்டே, முதியோர், சமுதாயக் கல்விப் பிரிவின் உதவித் தலைவர், மணிலாவிலுள்ள பொதுப் பள்ளிக்கூடங்களின் பணிமனை, பிலிப் பைன்ஸ்.

கருத்தரங்கம்

நவம்பர் 15-ஆம் நாளிலிருந்து, டிசம்பர் 10-ஆம் நாள் வரை நியூயார்க்கிலுள்ள ஐ. நா. அவையின் தலைமை யலுவலகத்தில் கருத்தரங்கம் ஒன்று நடைபெறும்.

தலைமையலுவலகத்தைப் பார்வையிட வந்தவர்கள்



ப்பிரிக்கக் கல்வி வல்லுநர்கள் பலர் "விக்டாப்" செயலகத்தை ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் வந்துபார்த்தனர். டப்பக்கத்தில் ஒரு புத்தகத்தைப் பார்த்தவாறு காட்சியளிப்பவரின் பெயர் முல்தாடா ஹாசன் அமீன் என்பது. அவர் டான் கல்வியமைச்சகத்தின் கல்வி நிறுவனத் தலைமை ஆய்வாளராகப் பணிபுரிகிறார். இடையிலுள்ள படத்தில் டப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாக உள்ளவர்களின் பெயர்கள் பின்வருமாறு :

1. ஆல்போன்ஸ் டெட்டெகபோ. 2. அயார்ஔனி யூசுப். 3. கோமி பார்த்தெலிமி. 4. லூயிஅப்ரிமா, 5. அலெக்கிஸ் சூளிம்பியாட். வலக்கோடியில் உள்ளவர் எம்பேயி எம்பென்குயூ.



கோஸ்ட்டாரிகாவிலுள்ள ஆசிரியச் சங்கம் மத்திய அமெரிக்காவிலேயே மிகப் பெரிய ஆசிரியச்சங்கமாகும். அதற்காகக் கட்டப்படும் புதிய கட்டடத்தை அச்சங்கம் அடுத்த ஆண்டு பிப்ரவரித் திங்களில் உரிமையாக்கிக் கொள்ளும். இங்குள்ள படங்கள் அச்சங்கத்தின் பழைய கட்டடமும், கட்டடக்கலை வல்லுநராம் வரையப்பட்ட வரைப்படமுமாகும்.

அக்கருத்தரங்கம் பாடப்புத்தகங்கள் எழுதுவோருக்கும், பிற கல்வித் துணைப் பொருள்கள் தயாரிப்போருக்கும் பெரிதும் பயன்படும்.

அக்கருத்தரங்கில் யார் யார் கலந்து கொள்கிறார்களோ அவர்களுக்கெல்லாம், ஐ. நா. அவையின் நடவடிக்கைகளின் ஆய்வுரைகள் தொகுத்துக் கொடுக்கப்படும். அவர்கள் அவ்வாய்வுரைகளைத் தங்கள் நாடுகளில் செயற்படுத்த வேண்டும். எதியோப்பியா, கானா, இந்தியா, ஜமெய்க்கா, கென்யா, லெபனான், லிபேரியா, மலேயா, நைஜீரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சியர்ராலியோனி, சிங்கப்பூர், சூடான், டான்சானியா, தாய்லாந்து, ஐ. அ. குடியரசு, உகாண்டா, சாம்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த "விக்டாப்" உறுப்பினர்கள் எழுத்தாளர்களின் பெயர்களை அனுப்பிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

புத்தகங்கள் எழுதுவதில் பங்கு கொள்வோர் ஆங்கிலம் பேசுவோராய் இருத்தல் வேண்டும். தங்கள் நாடுகளில் பாடப்புத்தக எழுத்தாளர்கள் இவர்கள் என்பது நாட்டினர்க்குத் தெரிந்திருக்க வேண்டும். தாங்கள் எழுதிய புத்தகங்கள் உள நிறைவு அளிக்கும் விதத்தில் முற்றுப் பெற்றபின் அதனை அரசோ பிற அமைப்போ வெளியிடும் ஒப்பந்தம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

ஐ. ஆ. சங்கத் தலைவர்களுடன் கல்வியமைச்சரின் சந்திப்பு

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், முதன்முறையாக ஜப்பானியக் கல்வியமைச்சர் ஜப்பான் ஆசிரியச் சங்கத்துத் தலைவர்களைச் சந்தித்தார். ஜப்பானியக் கல்வியமைச்சர்

உமிகிச்சி நகரமுரா, ஜப்பானியக் கல்விச் சங்கத்தின் தலைவர் சடாமிட்சு மியாநோஹரா ஆகிய இவர்களின் சந்திப்பு ஆகஸ்ட் 26-ஆம் நாள் நடந்தது.

1960-ஆம் ஆண்டிலிருந்தே, மேற்சொன்ன கல்வியமைச்சருக்கு முன்பிருந்த கல்வியமைச்சர்கள் ஜப்பானியக் கல்விச் சங்கத்தின் தலைவர்களைச் சந்திக்க மறுத்து வந்துள்ளனர். அப்படிச் சந்தித்தால் ஒரே ஓரமைப்புடன் பேரம் பேசுவதன் மூலம் அரசின் கல்விக் கொள்கை தீர்மானிக்கப்படுகிறது என்ற எண்ணம் ஏற்பட்டுவிடும் என்பது அக்கல்வியமைச்சர்களின் வாதமாகும். 550,000 உறுப்பினர்களைக் கொண்ட ஜ. ஆ. சங்கம், ஜப்பானிலேயே மிகப்பெரிய ஆசிரியச் சங்கமாகும்.

" உலகக் கல்விச் சிக்கல்களைகளைத் தீர்ப்பதற்குக் கிடைக்கக் கூடிய எல்லாச் சக்திகளையும் ஒன்று திரட்டவேண்டும். அச்சக்தி அரசாங்கச் சக்தியாகவோ, அரசாங்கச் சக்தியில்லாத வேறு சக்தியாகவோ, ஒரு நாட்டைச் சேர்ந்த சக்தியாகவோ, பன்னாட்டுச் சக்தியாகவோ இருக்கலாம் " என்று A. டலியான், யுனெஸ்கோ முதியோர் கல்வி, இளைஞர் நடவடிக்கைகள் இலாக்கா இயக்குநர், ஆடில் அபாபாவில் நடந்த " விக்டாப் " பேராள் கூட்டத்தில் பேசினர்.

கல்வித் திட்டம், அறியாமையை எதிர்த்துப் போர், பன்னாட்டினர் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள உதவும் கல்வி, ஆசிரியர்களின் சமுதாயச் சிறப்பு நிலைமையும், பயிற்சியும் ஆகிய துறைகளில் " விக்டாப்பும் " " யுனெஸ்கோவும் " ஒத்துழைத்தற்கியலும் எனினும், போன ஆண்டினைப் போலவே இவ்வாண்டும் இத்துறைகளில் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்று தெரியாமல் இருப்பதாகக் கூறினர் டலியான். அவர் " கல்வியின் மூலம் சரிசம வாய்ப்பு " என்பது குறித்துப் பேசும்போது உலகில், பள்ளி செல்லும் வயது வந்த குழந்தைகளில் 44 சதவீதத்தினர் தாம் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லுகின்றனர் என்பது புள்ளி விவரங்களின் மூலம் தெரிய வருவதாகக் கூறினர்.

அறியாமையை ஒழிக்க " யுனெஸ்கோ " நிரந்தரமாக உழைக்கிறது என்றும், பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி துணைபோக வேண்டும் என்றும், அதற்கு " விகடாபபில் " அங்கம் வகிககும் சங்கங்களின் உதவி வேண்டும் என்றும் டலியான் கூறினர்.

காலப்போக்கில் நாடுகள் பல சுதந்தரமடைவதால், அந்நாடுகளில் உள்ள குழந்தைகளும், இளங்குமரப் பருவத்தினரும் தாம் கல்வி கற்கவேண்டும் என்பதில்லை என்றும் முதியோர்களுக்கும் கல்வி கற்கும் உரிமையும் பயிற்சி பெறும் உரிமையும் உண்டென்றும் கூறினர் டலியான்.

" விக்டாப் "—" யுனெஸ்கோ " தொடர்புகள் தொடர்பான அறிக்கையில் வில்ஹெல்ம் ஈபர்ட் அவர்கள், ஆசிரியர்களின் நிலையை உயர்த்தும் நடவடிக்கைகள் " யுனெஸ்கோ " செயல் முறைத் திட்டத்தில் உரிய இடம் பெறுவதாகக் கூறினர்.

அடுத்த ஆண்டு செப்டம்பர்த் திங்களில், " யுனெஸ்கோ " பன்னாட்டுத் தொழிலமைப்பின் கூட்டு மாநாடு நடைபெறும் என்றும், அம்மாநாட்டில் இப்போது தயாராகக் கொண்டு வரும்

ஆசிரியர் நிலைமை தொடர்பான பன்னாட்டுப் பரிந்துரை நிறைவேற்றப்படும் என்றும் வில்ஹெல்ம் ஈ பர்ட் கூறினார்.

பொது மாநாடு அறியாமையை அகற்றும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்று ஈ பர்ட்டின் அறிக்கை கூறுகிறது.

சோதனைச் செயல்முறைத் திட்டமொன்று 1966—70-ஆம் ஆண்டுகளில் 8 நாடுகளில் நிறைவேற்றப்படும். 1970-ல், ஐ. நா. சங்கத்தின் இசைவின் பேரில் அறியாமையை எதிர்த்து உலக இயக்கமொன்று தொடங்கப்படலாம்.

இவ்வாண்டில், மேற் குறித்த பணிகள் செவ்வனே நடைபெறுவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெறுகின்றன. அந்தந்த நாடுகளின் நிலையை நேரில் கண்டறிந்து வருவதற்கு அல்ஜீரியா, டான்பினியா, ஈகுவேடார், பாக்கிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளுக்குத் தூதுக்குழுக்கள் அனுப்பப்படுகின்றன ; என்றார் ஹெர்பர்ட்.

நன்கமைந்த ஆசிரியத் தொழிலுக்கும், கென்யாவிலும், தாய்லாந்திலும் எழுத்தறிவு பரப்பு திட்டங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பினை ஆராயும் பணியை "விக்டாப்" "யுனெஸ்கோவுடன்" செய்து கொண்ட ஓரொப்பந்தத்தின் கீழ் மேற்கொண்டுள்ளது.

அறிஞர் அரங்கம் கற்பித்தலை ஒரு வாழ்க்கைத் தொழிலெனக் கருதுகிறது

ஆகஸ்டுத் திங்கள் 22-ஆம் நாளிலிருந்து 27-ஆம் நாள் வரை அன்டிவொவில், "விக்டாப்" கரிபியன், அன்டிகுவா ஆசிரியச் சங்கங்களின் ஒத்துழைப்போடு கற்பித்தல் ஒரு வாழ்க்கைத் தொழில் (Seminar on Teaching as a Profession) என்ற அறிஞர் அரங்கத்தை நடத்தியது.



ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தலும், பயிற்சி கொடுத்தலும், ஆசிரியச் சங்கங்களின் அமைப்பு ஆகிய பொருள்கள் முக்கியப் பொருள்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டன. கரீபியன் கடலைச் சூழ்ந்துள்ள, ஆங்கிலம் பேசும் நாடுகளைச் சார்ந்த ஆசிரிய அமைப்புக்களிலிருந்து வந்த பிரதிநிதிகள் அவ்வறிஞர் அரங்கத்தில் கலந்து கொண்டனர்.

அவ்வரங்கத்தின் துவக்கக் கூட்டத்தில் உரையாற்றியவர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) அன்டி போவின் தலைமை வழக்கறிஞர், W. L. மக்கன்டிரி. இவர் அன்டிகுவாவின் நிருவாகிக்குப் பதிலாகப் பேசினார்.

(2) அன்டிகுவா அரசின் பணிகள், செய்திப் போக்கு வரத்துத்துறையின் அமைச்சர் E. E. வில்லியம்ஸ். அவர் சமூகச் சேவை அமைச்சருக்குப் பதிலாகப் பேசினார்.

(3) "விக்டாப்பின்" உதவித் தலைமைச் செயலாளர் M. தாம்ப்சன். இவ்வறிஞர் அரங்கத்

கத்தில் பல கூட்டங்கள் நடைபெற்றன. அக்கூட்டங்களில் கீழ்க்காணும் பொருள்கள்பற்றி விவாதிக்கப்பட்டன.

(1) மனிதத் தொடர்புகளும், தலைவரும்.

(2) ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தலும் தகுதிச் சான்றுகள் தருதலும்.

(3) ஆசிரியச் சங்கங்கள்—வகைகள். அமைப்புக்கள். செயல் முறைத் திட்டங்கள், குழுக்கள், சிறப்புக் குழுக்கள் முதலியன.

(4) கற்பித்தலின் தனிக் கட்டுப்பாடுகள்—சம்பளங்கள், பணிச்சுமை, சேவைச் சலுகைகள் முதலியன.

(5) ஓய்வுபெறும் முறைகள்.

(6) "விக்டாப்பின்" செயல் முறைத் திட்டமும் பணியும்.

(1) L. S. ஷோரே, ஆசிரியர், மேற்கிந்தியத் தீவுகளின் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பல்கலைக் கழகத்திற்குப் புறம்பான இலாகா.

(2) டாக்டர் A. S. பிலிப்ஸ், மேற்கிந்தியத் தீவுகளின் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனத்தின் துணை இயக்குநர்.

(3) நார்மன் M. கோப்லே, கனடியன் ஆசிரியக் கூட்டிணைப்பின் துணைச் செயலாளர்.

(4) A. C. டாசன். அமெரிக்காவிலுள்ள வடகரோலின கல்விச் சங்கத்தின் செயலாளர்.

(5) திருமதி எடிக்டால்டன்—ஜேம்ஸ். கரீபியன் ஆசிரியர் ஒன்றிப்பின் தலைவர்.

(6) ஜோஸ் ஜோ குவின் ரிவேரா, அமெரிக்க நாடுகளின் "விக்டாப்" அறிஞர் அரங்கச் செயல் முறைத் திட்டத்தின் இயக்குநர்.

(7) ஜான் M. தாம்ப்சன். ஆகிய இவர்கள் அக்கூட்டங்களில் கலந்து கொண்டனர்.



காண்டல், கேட்டல் கல்வி தொடர்பான "விக்டாப்பின்" தனிச் சிறப்புக்குழு கம்பலாவில் ஒரு தொழிற்சாலையை ஜூலை மாதத்தில் நடத்தியது. அவ்வமயம் உகாண்டா ஆசிரியச் சங்கத்தின் புதிய தலைமையலுவலகக் கட்டடம் கட்டுவதற்குக் கடைக்கால் போடப்பட்டது.

கடைக்கால் போடும் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர்களை கீழ் வருமாறு (இடமிருந்து வலமாக).

(1) பால் ந. எம்வேந்தகென்யா தேசிய ஆசிரியர் ஒன்றிப்பின் பொருளாளர்.

(2) ஸ்டீபன் J கியோனி, மேற்குறித்த ஒன்றிப்பின் தலைமைச் செயலாளர், "விக்டாப்" செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினர்

(3) பால் லுபூலெலா, மேற் சொன்ன ஒன்றிப்பின் செயல் நிறைவேற்று உதவியாளர்.

(4) S. J. சூலிம்பாசிசேக், உகாண்டா கல்வியமைச்சர், கடைக் காற்கல் நாட்டியவரும் இவரே.

(5) ஜான் இடாகா. தலைமைச் செயலாளர் உ. ஆ. ஓ.

(6) ஜாய்சி மெசெம்பி, முன்னுள் தலைவர் உ. ஆ. ஓ.

"விக்டாப்புடன்" 1959-ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட உ. ஆ. ஒ. வின் வயது 21 ஆண்டுகள் புதிய உ. ஆ. ஓவின் தலைமையலுவலகக் கட்டடத்தில், அலுவலகமும், ஆசிரியர்களுக்குப் பயன்படும் நூலகமும் இடம் பெறும். இத்தலைமையலுவலகக் கட்டடம் ஆசிரியர்களுக்குத் தகவல் நிலையமாகவும், கூடும் இடமாகவும் பயன்படும்.

இப்புதிய கட்டடத்திற்காகும் மொத்தச் செலவு 58,000 பவுண்டுகள் என்று மதிப்பிடப்பட்டுளது. கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்புடன் இணைந்துள்ள, பிரிட்டிஷ் கொலம்பியா ஆசிரியக் கூட்டிணைப்பு உ. ஆ. ஓவிற்கு 1000 டாலர்களை நன்கொடையாக நல்கியுள்ளது. புதிய நூலகத்திற்கு "விக்டாப்" புத்தகங்கள் தந்துதவும்.

"கல்வி எந்த ஒரு சக்தியைக் காட்டிலும், குடிமகன் ஒருவனின் எதிர்காலத்தை உருவாக்கும்." இவ்வாறு நியூயார்க்கில், ஜுன் திங்களில், தேசியக் கல்விச் சங்கத்தால் நடத்தப்பட்ட பேரர்ள் கூட்டத்தில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் லிண்டன் B. ஜான்சன் கூறினுர்.

தேசிய ஆசிரியர்களின் தனிச் சிறப்புக்குழு ஒன்றை நிறுவவேண்டும் என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கருத்துத் தெரிவித்துள்ளார். நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகளிலும் கிராமீய வறுமைப பகுதிகளிலும் ஆங்குள்ள ஆசிரியர்களுடன், உழைப்பதற்கு ஆசிரியப் பணிக்கென்றே தம்மைக் காணிக்கையாக்கிக் கொண்டுள்ள ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதே இத்தனித் துறைக் குழுவின் நோக்கமாகும். அத்தனித்துறைக் குழுவில் கற்பித்தலைத் தம் வாழ்க்கை நெறியாகக் கொண்டுள்ள இளைஞர்களே முக்கியமாக இருப்பார்கள் என்று குடியரசுத் தலைவர் விளக்கமாகக் கூறினுர்.

MILLION DOLLAR FUND FOR TEACHER RIGHTS

தொடக்கநிலை ஆசிரியர்களுக்கும், இடைநிலை ஆசிரியர்களுக்கும், பயன்படும் பொருளுதவி ஏற்பாட்டுச் செயல்முறைத் திட்டமொன்று பேராயத்தின்முன் சமர்ப்பிக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் கூறினுர். அப்படிச் செய்வது அவ்வாசிரியர்கள் தங்கள் திறமைகளையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள உதவும். இவ்வகைத் திட்டம் பள்ளி இணைப்புத் திட்டத்தால் அகற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படும் எப்படி? புதிய சூழ்நிலையில், புதிய நூற்றுண்டில், திறமைக்கு அறைகூவல் விடுக்கும், கல்வி தொடர்பான புதிய தொழில்களைச் செய்வதற்குத் தேவையான திறமைகளைப் பெறுவதற்கு மேற் குறித்த திட்டம் ஆசிரியர்களை அனுமதிக்கும்.

தேசியக் கல்விச் சங்கத்தின் கூட்டம் நடக்கும் போது, அதன் இயக்குநர்கள் ஆசிரியர் களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மிலியன் டாலர் நிதி சேர்க்க ஓரியக்கத்திற்கு அதிகார மளித்தனர். பள்ளி இணைப்புத் திட்டத்தால் தங்கள் பதவிகளை இழந்த ஆசிரியர்கள் சட்ட உதவியும், மற்றத்தேவையான உதவிகளும் பெறுவதற்கு அந்நிதி பெரிதும் பயன்படும்.

பள்ளி இணைப்புத் திட்டத்தால் ஆயிரக்கணக்கான, ஆசிரியர்கள்—குறிப்பாக நீக்ரோ ஆசிரியர்கள் தங்கள் பதவிகளை இழந்துவிட்டனர்; அல்லது இழந்து விடுவார்களென அச்சுறுத் தப்படுகின்றனர் என்று தேசியக் கல்விச் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள துண்டறிக்கை கூறு கிறது. பள்ளி இணைப்புத் திட்டத்தால் மட்டும் எழுந்துள்ள சிக்கல்களைவிட மேற்சொன்ன நிதியின் நோக்கங்கள் விரிவானவை என அவ்வறிக்கை தொடர்கிறது. அந்நிதி நாடெங்கும் பணியாற்றும் ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், முன்னேற்றவும் பயன்படுத்தப்படும்.

மேலேயுள்ள படந்தான் மிலியன் டாலர் நிதியின் சின்னமாகும்.

"விக்டாப்பின்" காலாண்டுப் பத்திரிகையான கல்வி நிறைகாட்சி இப்போது ஐந்து மொழி களில் வெளியிடப்படுகிறது. கல்வி நிறைகாட்சி யின் அரபி மொழி பெயர்ப்பே மேலேயுள்ள படம் இம் மொழியில் இப்போதுதான் இப்பத்திரிகை வெளி வருகிறது. அரபி மொழியில் வெளிவரும் இவ்வேடு கெய்ரோவில் அச்சிடப்படுகிறது. புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள எல்சாயத் அலி முகம்மது இவ் வேட்டினை அரபி மொழியில் வெளிக்கொணரும் பொறுப்புடையோர் ஆவார்.

கல்வி நிறைகாட்சி ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், ஜாப்பானிஸ் ஆகிய மொழிகளிலும் வெளி வருகிறது.

★

"விக்டாப்" செயலகத்தின்
புதிய முகவரி
1330, Massachusetts Avenue,
N. W., Washington, D. C.
20005, U. S. A.